**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**O.S. No. 142 / 2019**

**பி.வா.சா.2 – கிருஷ்ணமூர்த்தி 14.11.2025**

**3 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

06.01.2016 நான் கடலோர காவல் படையில் பணிபுரிந்து வருகிறேன். 03.08.2016 அன்று பொன்னம்மாள் உயில் எழுதிய போது நான் உடன் இல்லை. 04.08.2016 அன்று நோட்டரி வழக்கறிஞர் முன்னிலையில் 1ம் பிரதிவாதி கைரேகை பதிவு செய்த போது நான் உடனிருந்தேன். நான் கடலோர காவல் படையில் மண்டபத்தில் பணியில் இருந்தேன். நான் 04.08.2016 சமயத்தில் ஒரு வாரம் விடுப்பில் இருந்தேன். 04.08.2016 அன்று நான் விடுப்பில் இருந்துள்ளேனா இல்லையா என்பதை எனது அலுவலகத்தில் வருகை பதிவேட்டை பார்த்தால் தெரியும் என்றால் சரிதான். 03.08.2016ல் உயில் எழுதப்படவும் இல்லை 04.08.2016ல் நோட்டரி அட்வகேட் முன்னிலையில் 1ம் பிரதிவாதி அந்த உயிலில் கைரேகை பதிவு செய்யவுமில்லை நான் 04.08.2016ல் உடனிருக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 03.08.2016 அன்று நான் உடனிருக்கவில்லை என்பதால் உயிலை எங்கு வைத்து யார் எழுதினார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். 03.08.2016 அன்று உயிலில் யார் கையொப்பம் போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்படி உயில் பதிவு செய்யப்படாததற்கு என்ன காரணம் என்று எனக்கு தெரியாது. உயிலில் கண்ட சொத்துக்கள் மானாமதுரை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உட்பட்ட சொத்துக்கள் என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது கரிசல்குளத்தில் உள்ள சொத்துக்கள் என்று எனக்கு தெரியும். மேற்படி உயிலில் எத்தனை சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. எந்தெந்த கிராமத்தில் உள்ள சொத்துக்கள் அந்த உயிலில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. நான் 09.08.2016ல் விடுப்பு முடிந்து

பணியில் சேர்ந்தேன். நான் தற்செயல் விடுப்பில் இருந்தேன். 2ம் பிரதிவாதிக்கு எனது தகப்பனார் தான் வழக்கறிஞர் நியமனம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் சொத்துக்களை நிர்வாகிப்பதற்கு எனது தகப்பனார் உடனிருந்து உதவி செய்து வருகிறார் என்றால் சரிதான். நான் சொன்ன உயில் அந்த தேதியில் எழுதப்படவில்லை 1ம் பிரதிவாதி அதில் கையொப்பம் செய்யவில்லை என்றும் எனது தகப்பனாரும் 2ம் பிரதிவாதியும் சேர்ந்து வழக்கிற்காக அந்த உயிலை உற்பத்தி செய்துள்ளார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. 03.08.2016 ல் 1ம் பிரதிவாதி உயிலில் கையொப்பம் செய்த போது நான் உடன் இல்லை என்றால் 04.08.2016ல் தான் 1ம் பிரதிவாதி உயிலில் கைரேகை பதிவு செய்தார். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.33ல் உள்ள புகைப்படத்தில் அந்த ஆவணத்தை வழங்கும் அதிகாரிதான் கையொப்பம் செய்து முத்திரையிடுவார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பி,வா,சா,ஆ.33 ஆவணம் இந்த உயிலை ஊர்ஜீதம் செய்வதற்காக நாங்களாக தயார் செய்து தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் பெயரில் வேறு பதிவு செய்யப்பட்ட ஆவணம் உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணங்களை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். 2ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

04.08.2016 காலத்தில் நான் ஒருவாரம் தற்செயல் விடுப்பில் இருந்தேன் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.33 எந்த காலகட்டதற்கானது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.33ல் என்ன விபரம் உள்ளது என்று எனக்கு தெரியாது. வாதி வள்ளி யார், யார் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. வாதி எத்தனை லக்க சொத்துக்களுக்கு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று

எனக்கு தெரியாது. அந்த சொத்துக்களின் சர்வே எண், விஸ்தீரணம் ஆகியவை எனக்கு தெரியாது. வாதி வள்ளி 2ம் பிரதிவாதியின் தாயாரான 1ம் பிரதிவாதியின் அக்கா மகள் என்ற விபரம் எனக்கு தெரியும். எனக்கு சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் வரவில்லை 2ம் பிரதிவாதி தான் என்னை சாட்சியம் சொல்வதற்கு அழைத்து வந்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எழுதி வைத்ததாக கூறும் உயிலில் எத்தனை சொத்துக்கள் உள்ளது என்றும் அதன் சர்வே எண்களும் எனக்கு தெரியாது. உயிலில் 04.08.2016ல் சிவகங்கையில் வைத்து 1ம் பிரதிவாதி கைரேகை பதிவு செய்தார். மேற்படி உயிலுடன் வேறு ஆவணங்கள் எதுவும் இணைக்கப்படவில்லை. 03.08.2016அன்று இந்த உயிலை எங்கு வைத்து யார் எழுதினார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.33 உயிலில் அதனை தயாரித்தவர் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் மேற்படி உயிலில் முதலாவதாக சாட்சி கையொப்பம் போட்டார் அதன்பின்பு பாலமுருகன் சாட்சி கையொப்பம் போட்டார். எனது அப்பாவின் கையொப்பமும் பாலமுருகனின் கையொப்பமும் வேறு வேறு பேனாக்களை கொண்டு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிக்க பாகபாத்திய உரிமையுள்ள சொத்துக்களை அபகரிக்கும் நோக்கத்துடன் 2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதி உயில் எழுதி வைத்தது போல் மோடியாக பி.வா.சா.ஆ.33 ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளார் என்றும் அதற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. அந்த மோசடி உயிலை தயார் செய்வதற்கு எனது தகப்பனாரும் உடந்தையாக இருந்த காரணத்தினால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் 04.08.2016 அன்று சிவகங்கையில் வைத்து உயிலில் கையெழுத்து செய்யவில்லை என்றும் அதனை நான் பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை